செய்தி வெளியீடு எண்.206 நாள்.17.04.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் 21.04.2017 அன்று விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 21.04.2017 அன்று **வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு** திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை அறிவியல் நிலையம் (KVK) திருவூர், வருவாய்த்துறை, மின்வாரியம், கூட்டுறவுத்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காணவுள்ளனர்.

எனவே இம்மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமென திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~